1969 பிப்ரவரி 28]

the Nambikurichikulam, Nalanthula tank, Tharuvaikulam tank, Nanthankulam tank, Erumaikulam tank, Avaikalakulam tank and Aiyankulam tank in Radhapuram sub-taluk of Tirunelveli district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல்வேறு குளங்களுக்குத் தண்ணீர் வசதி அளிப்பதற்காக சிறிய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவது பற்றிய திட்டத்தைப் பொதுப்பணித்துறை ஆய்வு செய்து வருகிறது.

திரு. டி. மார்டின்: பேரவைத்தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டாரத்தில் பஞ்ச நிவாரண வேலை செய்ய நம்பியாற்றில் அணைக்கட்டு கட்டினால், அதன் காரணமாக அங்கே உள்ள குளங்களுக்கு அதிகமான நீர் கிடைத்து விவசாயம் அபிவிருத்தி ஆகும் என்கிற காரணத்தால், அங்கே பஞ்ச நிவாரண வேலை அடிப்படையில் முன்கூட்டியே இந்த வேலைகளைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் கருத்தைப் பரிசீலிக்கலாம்.

எஸ்பிளனேடிலுள்ள கதர் விற்பனை நிலையம்.

*107 வினு—திரு. ஏ. எம். இராஜா:
திரு. கொளத்தூர் கோதண்டம்: } மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எஸ்பிளனேடில் இப்போது கட்டப்பட்டு வரும் கதர் விற்பனைப் பெரு நிலையத்தின் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?

(இ) ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு குறைந்த ஒப்பந்த தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ரூ. 71.15 லட்சம்.

(இ) ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. மிகக் குறைந்த ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்படவில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஒப்பந்தப் புள்ளிகள் விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டனவா? ஆம் எனில், எந்த எந்த பேப்பர்களில் வெளியிடப்பட்டன, எந்த எந்த தேதிகளில் வெளியிடப்பட்டன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: குறைந்த டெண்டர் வரவழைக்கப்பட்டும், மீண்டும் (எஸ்டிமேட்) ரிவைஸ் செய்யப்பட்டு, பிறகு இந்த மாநில முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு

வேண்டியவர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது என்றும் நீண்ட காலமாக கட்டிடம் கட்டி முடிக்காமல் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அதற்குக் காரணம் என்ன? (குறுக்கீடு) முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் . . .

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் உறவினருக்குக் கொடுக்கப்பட்டது என்கிற தகவல் இல்லை. மதிப்பீடு 1962-ல் தயாரிக்கப்பட்டது. நெருக்கடி நிலை காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. பிறகு 1965-ல் அனுமதி வழங்கப்பட்டது. அப்பொழுது மேலும் அது திருத்தி, அறைகள் புதிதாக ஏற்படுத்தவேண்டும் என்ற காரணத்தால், திருத்த மதிப்பீடு செய்யப்பட்டதால், அந்தச் செலவு அதிகமாகியிருக்கிறது.

மு.ப. 9-30 திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் கட்டுவதற்காக முதலில் மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு? கட்டடம் கட்டி முடிக்கப்படுவதற்காக இப்போது ரிவைஸ்டு எஸ்டிமேட்டின்படி மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, முதலிலே 18.8 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கதர் அங்காடிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு 15—3—1959-ல் திட்டமிடப்பட்டது. பின்னர் திருத்திய மதிப்பீடுகளின்படி நிலங்களைக் கையகப்படுத்தவும், சென்டேஜ் சார்ஜ் முதலியவற்றிற்காகவும் சேர்த்து செலவிடப்பட்ட தொகை 76,93,157 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திருப்பூர் நகரசபை முன்பு 'கேரோ'

* 108 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

30—3—1968-ல் திருப்பூர் நகரசபை முன்பாக 100-க்கு மேற்பட்ட பெண்கள் காலிக் குடங்களைக் கையிலேந்தி நகரசபை உறுப்பினர்களை வெளியே செல்லவிடாது 'கேரோ' செய்தனரா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே; சென்னையிலே கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. திருப்பூரிலே நடைபெற்றதுபோல் சென்னையிலே நடைபெறாமல் தடுப்பதற்கு, சென்னையில் அதிக அளவில் தண்ணீரை சப்ளை செய்வதற்கு விசேஷ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது பற்றி நேற்றைய தினம் பொதுநலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஓர் விளக்க அறிக்கை வைத்தார்கள். அதில் எல்லாம் அடங்கியிருக்கின்றன.